சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.06.10.2025.
SC.No.31/2023
PW7: (Lw10) பிச்சை (வயது 54 ) த/பெ. கிருஷ்ணன்
(2 ஆம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர், 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சமயபுரம் சொக்கலிங்கபிள்ளை காலனியில் குடியிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் 2 ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னடையது தான் அது அ.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அவருடன் சம்மந்தப்பட்ட வழக்கு பற்றி தெரியாது. எனக்கு பட்டியல் சாட்சி நாகூர் மிரானை எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு கையெழுத்துக்களையும், சமயபுரம் கோவில், ராஜகோபுரம் முன்பாக நான் வேலைக்கு சென்று கொண்டிருந்தபோது, போலிசார் என்னிடம் வாங்கினார்கள். வழக்கமான சோதனை செய்ததற்காக கையொப்பம் போடுமாறு கேட்டார்கள் அதனால் கையொப்பம் போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரிவேண்டப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

16.03.2011 ஆம தேதி அதிகாலை 5 மணியளவில் நானும் சந்தப்பேட்டையை சேர்ந்த சாகுல் உறமீது மகன் நாகூர் மீரானும் சமயபுரம் நால்ரோடு ஆர்ச் அருகே நின்று கொண்டிருந்தபோது, சமயபுரம் காவல் ஆய்வாளர் சந்தேகத்தின்பேரில் ஜப்ருதின் த/பெ.காஜாமொய்தீன் என்பவரை கைது செய்தும் மேற்படி எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதனை பதிவு செய்த காவல் ஆய்வாளர் சாட்சியாக என்னிடமும், நாகூர் மீரானிடமும் கையொப்பம் பெற்றதாகவும் ஆஜர் எதிரிகொடுத்த வாக்குமூலத்தின்படி எதிரியையும்,

என்னையும் சமயபுரம் காவல் ஆய்வாளர் திருச்சி பெரியகடை வீதியில் உள்ள அலமேலு ஜிவல்லர்ஸ் உரிமையாளர் இடும்பவேல் மகன் லட்சுமணன் என்பவர் எதிரியிடம் வாங்கிய தாலியுடன் கூடிய தங்க செயினை உருக்கி விட்டதாக கூறி சுமார் 52 கிராம் எடையுள்ள தங்க கட்டியினை எடுதது ஆஜர் செய்ததாகவும், 16.03.2011 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு அதனை சமயபுரம் காவ்ல ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும் அதில் நானும் நாகூர் மீரானும் சாட்சிகளாக கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

/ signed/
பிச்சை

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி